P. No: 11

தினமலர் ஈரோடு, செப்டம்பர் 3 2004

# காளிங்கராயன் கதை நூல் வெளியீட்டு விழா

ஈரோடு,செப்.3-

காளிங்கராயன் கதை நூல் வெளியீட்டு விழா வருகின்ற 5ம் தேதி கொங்கு கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியில் டாக்டர் மகாலிங்கம் தலைமைவகித்து காளிங்கராயன் கதை என்ற நூலினை வெளியிடுகிறார். மத்திய சமூக நீதித்துறை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் காளிங்கராயன் உருவப்படத்தை திறந்து வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் எஸ் கேஎம் மயிலானந்தன், சின்னசாமி, துரைசாமி, செங்கோட்டுவேலன், திரைப்பட நடிகர்கள் சிவகுமார், சத்யராஜ், டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், புலவர் ராசு, செல்லமுத்து, நூல் ஆசிரியர் பாஸ்கரதாசன் உட்பட பலர் கலந்துகொண்டு பேசவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் செய்துள்ளனர்.